LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு – 2005/2006 (வெளிவாரி)
## (ஏப்ரல் 2008)

## CC 103 இணைந்த பாடநெறி

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**முதலாம் பகுதியில் எல்லா வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி – I

01. மிகச் சுருக்கமான விடை தருக.
    - (அ) புவியியல் என்பது யாது? புவியின் பல்வேறு பிரிவுகளையும் தருக.
    - (ஆ) பொருளியலின் நவீன சிந்தனையாளர்கள் ஐவர் பெயர் தருக.
    - (இ) மானிடவியல் என்பது யாது? மானிடவியற் சிந்தனையாளர்கள் நால்வர் பெயர் தருக.
    - (ஈ) அரசியல் யாப்பு என்பது யாது?
    - (உ) மெய்யியல் என்பது யாது? முக்கியமான மெய்யியற் சிந்தனைகள் மூன்று தருக.
    - (ஊ) செய்யுளுக்கும் உரைநடைக்குமுள்ள வேறுபாடு யாது?
    - (எ) நாடகம் சினிமாவினின்று எவ்வாறு வேறுபடுகின்றது
    - (ஏ) தொல்பொருளியல் என்பது யாது? அது வரலாற்றை அறிய எவ்வகையில் உதவுகிறது.
    - (ஐ) தலைமுறை இடைவெளி என்றால் என்ன? அது ஏன் உண்டாகிறது.
    - (ஒ) விஞ்ஞான அணுகுமுறை என்பது யாது?

### பகுதி – II

02. இலங்கை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகளை அதன் தாக்க முறையில் வரிசைப்படுத்தி, அவற்றுள் ஏதாவது ஒரு பிரச்சனையை எடுத்து விளக்குக.

03. சமூகவியற் கல்வியும், வரலாற்றுக் கல்வியும், அழகியற் கல்வியும் இன்றைய இலங்கை மாணவ சமூகத்திற்கு மிக அவசியமானவை என்பதற்கு நீர் காட்டும் காரணங்கள் யாவை?

04. "பொதசனத் தொடர்புச் சாதனங்கள், அதிலும் முக்கியமாகத் தொலைக்காட்சி இன்றைய எமது இளம் தலைமுறையினரின் பண்பாட்டில் மிகப் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது." ஆராய்க.

05. மனிதகுலம் எதிர் கொள்ளும் இன்றைய சவால்கள் யாவை? விளக்குக.

06. இன்றைய விஞ்ஞான சாதனைகளுள் மிக முக்கியமான மூன்றினை விளக்குக.

07. புவி வெப்பமடைதலால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை விளக்கி அதனைத் தடுக்கக்கூடிய வழிமுறைகள் யாவை என ஆராய்க.

08. 'புலம்பெயர் இலக்கியம்' எனக் குறிப்பிடப்படும் இலக்கிய வகை பற்றி விளக்குக.